அறிவுமுகமாக தடம் பதித்தவர் முரசொலி மாறன்

முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

சென்னை, நவ.24: முரசொலி மாறன் நினைவு நாளை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

அறிவுத் திருவிழா எடுத்த நம் இயக்கத்தின் அறிவுமுகமாக டெல்லியிலும் தோகாமாநாட்டிலும் தடம் பதித்தவர் முரசொலி மாறன். கலைஞரின் மனசாட்சியாகவும், கழகம் கடந்து வந்த நெருப்பாறுகளின் வரலாற்று சாட்சியாகவும் நிலைபெற்ற முரசொலி மாறன் நினைவு நாளில் அவரது பணிகளைப் போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சட்டப்பேரவை தேர்தல்

காங்கிரசுக்கு செல்வாக்கு உள்ள தொகுதிகள் எவை?

தொகுதி பங்கீட்டு குழு ஆலோசனை

சென்னை, நவ.24: வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுகவுடன் தொகுதி பங்கீடு உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளை நடத்த மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையிலான குழுவில், தமிழக தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். இந்த குழு நேற்று சென்னையில் ஆலோசனை நடத்தியது. எந்தெந்த தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு உள்ளது எதிமுக விடம் எத்தனை தொகுதிகளை கேட்டு பெறுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்

அதிமுக செயற்குழு-பொதுக்குழு வரும் டிசம்பர் 10ம் தேதி கூடுகிறது

சட்டசபை தேர்தல் கூட்டணி குறித்து முக்கிய முடிவு எடுக்கப்படுகிறது

சென்னை, நவ.24: பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் அதிமுக செயற்குழு, பொதுக்குழு வருகிற 10ம் தேதி கூடுகிறது. இக்கூட்டத்தில் சட்டப்பேரவை தேர்தல் கூட்டணி குறித்து முக்கிய முடிவு எடுக்கப்படுகிறது.

இது குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம், டிச.10ம் தேதி(புதன் கிழமை) காலை 10 மணிக்கு, சென்னை, வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாசல பதி பேலஸ் மண்டபத்தில், அதிமுக அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் நடைபெற உள்ளது. அதிமுக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் தனித் தனியே அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்படும். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பிதழுடன் தவறாமல் வருகை தந்து, தேர்தல் வியூகம், வெற்றி வாய்ப்பு, கள நிலவரம், கூட்டணி குறித்து முடிவெடுக்கும் அதிகாரம், கூட்டணி பேச்சுவார்த்தை, கூட்டணிக்கு கட்சிகளை இழுப்பதற்கான வியூகங்கள் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட வாய்ப்பு உள்ளது. மேலும் கூட்டணி தொடர்பான முடிவை எடுக்க எடப்பாடிக்கு அதிகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று கூறப்படுகிறது. அதிமுக ஒருங்கிணைப்பை வலியுறுத்திய முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நீக்கம் மற்றும் அதிமுக-பாஜக கூட்டணி அமைத்த பின் நடைபெறும் முதல் பொதுக்குழு கூட்டம் இதுவாகும். இதனால் என்னென்ன முடிவுகள் எடுக்கப்படும்? என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அதிமுக செயற்குழு-பொதுக்குழு கூட்டம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

எடப்பாடி மீண்டும் பிரசாரம்

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட அதிமுக சார்பில், கோபிசெட்டிபாளையத்தில் 30ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டத்தில் பேசுகிறார் என அதிமுக தெரிவித்துள்ளது.

அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என கூறப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் சட்டசபை

வாக்காளர் உதவி மையம்

► வேலூர் கொணவட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று வாக்காளர் உதவி மையம் நடைபெற்றது. இதில் பல வாக்காளர்கள், எஸ்ஐஆர் படிவங்களை பெற்று, பூர்த்தி செய்தனர்.

தமிழகத்தில் காலியாக உள்ள 48 மருத்துவ இடங்கள்

என்எம்சி அனுமதி பெற்று நிரப்ப நடவடிக்கை

சென்னை,நவ.24: தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ் படிப்புகளுக்கான 4 கட்ட கலந்தாய்வு நிறைவடைந்த நிலையில், இன்னும் 48 இடங்கள் நிரம்பாமல் உள்ளதால் அவற்றை நிரப்ப தேசிய மருத்துவ ஆணையத்திடம் மாநில மருத்துவ கல்வி இயக்ககம் அனுமதி கேட்டுள்ளது.

2025-26ம் கல்வியாண்டுக்கான அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் எம்பிபிஎஸ் மற்றும் பிடிஎஸ் படிப்புகளுக்கு நீட் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசை பட்டியல் கடந்த ஜூலை மாதம் வெளியானது. பொது தரவரிசை மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% ஒதுக்கீடு தரவரிசை பட்டியல் என தனித்தனியாக வெளியானது. சுமார் 72,000 மேற்பட்டவர்கள் மருத்துவப் படிப்புகளுக்கு விண்ணப்பித்து இருந்தனர். தமிழ்நாட்டில் அரசு மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள 15 சதவீத இடங்கள் அகில இந்திய கலந்தாய்வு மூலமும், மீதமுள்ள 85 சதவீத இடங்களும், தனியார் கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீடு மற்றும் மேனேஜ்மெண்ட் இடங்களுக்கு தமிழ்நாடு அரசின் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகம் மூலம் கலந்தாய்வு நடத்தப்பட்டு நிரப்பப்படுகிறது.

அதன்படி, இந்த கல்வி ஆண்டிற்கான கலந்தாய்வு ஜூலை இறுதி தொடங்கியது. இதில் எம்பிபிஎஸ் படிப்பிற்கு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரி அரசு ஒதுக்கீடு இடங்களில் 6,600 இடங்களும், தனியார் கல்லூரி மேனேஜ்மெண்ட் கோட்டாவில் 1,144 இடங்களும் இருந்தன. அதேபோன்று, பிடிஎஸ் படிப்பிற்கு அரசு கோட்டாவில் 1,583 இடங்களும், தனியார் கல்லூரி கோட்டாவில் 515 இடங்கள் இருந்தன.

அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத கோட்டாவில் 495 எம்பிபிஎஸ் மற்றும் 119 பிடிஎஸ் இடங்கள் இருந்தன. இவை தவிர என்.ஆர்.ஐ கோட்டாவில் மொத்தம் 600 மேற்பட்ட இடங்கள் இருந்தன.

ஜூலை இறுதியில் தொடங்கிய பொது கலந்தாய்வு https://tnmedicalselection.net/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக தொடர்ந்து 4 சுற்றுகளாக நடைபெற்றது. மேலும், ஜூலை 30ம் தேதி 7.5 சதவீத ஒதுக்கீடு மற்றும் சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு ஒரே கட்டமாக நடைபெற்றது

4 சுற்றுகள் முடிந்த நிலையிலும், சென்னை மற்றும் கடலூர் அரசு பல் மருத்துவக் கல்லூரியில் 3 பிடிஎஸ் இடங்களும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு மற்றும் மேனேஜ்மெண்ட் கோட்டா சேர்த்து மொத்தம் 48 இடங்கள் காலியாக உள்ளன. இதில் 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் 1 பிடிஎஸ் இடம் காலியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த செயல்முறை

தமிழகத்தில் இன்று முதல் தேர்தல் அதிகாரிகள் கள ஆய்வு

அர்ச்சனா பட்நாயக் தகவல்

சென்னை,நவ.24: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த செயல்முறையை யொட்டி தமிழகத்தில் இன்று முதல் தேர்தல் அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொள்ள உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2026ம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முழுவதும் சிறப்பு தீவிர திருத்த செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்ய இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தமிழகத்திற்கு வருகை தர உள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த பவன், துணை இயக்குநர் மற்றும் தேவன்ஷ் திவாரி ஆகியோர் நவம்பர் இன்று முதல் வரும் 26ம் தேதி வரை சென்னையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கட்டம் குறித்த ஊடக ஒருங்கிணைப்பு மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வார்கள். அதைத் தொடர்ந்து, அவர்கள் கள அளவிலான ஆய்வுகளை மேற்கொள்வார்கள். கூடுதலாக, இந்திய தேர்தல் ஆணையத்தின் இயக்குனர் கிருஷ்ண குமார் திவாரி, இச்சிறப்பு தீவிர திருத்த செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து, குறிப்பாக மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட வாக்கு சாவடி நிலை அலுவலர்கள் மூலம் கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் மற்றும் அதன் டிஜிட்டல் முறை உள்ளீடு குறித்து மதிப்பாய்வு செய்வதற்காக கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு வருகை தருவார்.

இதேபோல் மதுசூதன் குப்தா, செயலர் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்குச் சென்று சிறப்பு தீவிர திருத்தம் பற்றி ஆய்வு செய்வார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்று 11 மாவட்டங்களில் கனமழை... முதல் பக்க தொடர்ச்சி

கூடிய லேசான, மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31-32 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25-26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இன்று முதல் 27ம் தேதி வரை தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

இன்று தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், வடக்கு அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். 25ம் தேதி மற்றும் 26ம் தேதி தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 60 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்திலும், தெற்கு மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகள், ஏனைய தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். வடக்கு அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் தெற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். ஆழ்கடலில் உள்ள மீனவர்கள் 24ம் தேதிக்குள் (இன்று) கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள். இந்த நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகப்பட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கில் 26 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது. திருநெல்வேலி மாவட்டம் ஊத்து 25 செ.மீ, காக்காச்சி 23; மாஞ்சோலை 21 செ.மீ, திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம் தலா 13 செ.மீ, கயத்தார் 11 செ.மீ, காயல்பட்டினம் 10 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

கொரோனா நேரத்தில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு அரசு வேலை

ஓபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, நவ.24: முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

கொரோனா தொற்றின்போது பணியாற்றிய அரசு மருத்துவர் விவேகானந்தன் என்பவர் உயிரிழந்தார். இதனையடுத்து மறைந்த மருத்துவர் விவேகானந்தனின் மனைவி கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்குமாறு கோரியிருந்தார். அரசாங்கத்திடம் பலமுறை முறையிட்டும் பலன் இல்லாத நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு வேலை தர உத்தரவிடுமாறு மனுத் தாக்கல் செய்தார். இவரது மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் அவருக்கு கருணை அடிப்படையில் வேலை அளிக்க உத்தரவிட்டது. இருப்பினும், இதுநாள் வரை மறைந்த மருத்துவர் விவேகானந்தனின் மனைவிக்கு அரசு வேலை வழங்கப்படவில்லை. முதல்வர் இதில் உடனடியாக தலையிட்டு, கொரோனா நோய்த் தொற்று தீவிரமாக இருந்த நேரத்தில் பணியில் இருந்தபோது உயிரிழந்த மருத்துவர் விவேகானந்தனின் மனைவி உள்பட பணியில் இருந்தபோது இறந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினக்கூலி தொழிலாளர்களை ஊக்குவிக்காமல்

அரசு துறைகளில் நிரந்தர பணியாளரை நியமிக்க வேண்டும்

ஒன்றிய அரசுக்கு ஐஎன்டியுசி வலியுறுத்தல்

சென்னை, நவ.24: தமிழ்நாடு ஐஎன்டியுசியின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் முதல் செயற்குழு கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு தமிழ்நாடு தலைவர் மு.பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் நிர்வாகிகள் கோவை செல்வம், வாழப்பாடி இராம.கர்ணன், துறைமுகம் முனுசாமி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 3 பேர் கொண்ட நிர்வாக குழுவை நியமித்து, அவர்களின் வழிகாட்டுதலின்படி புதிய மாவட்ட தலைவர்கள் அறிவிக்கப்படுவார்கள்.

தேர்தல் இல்லாத காலத்தில் தீவிரமாக வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வது வழக்கமாக நடத்தப்படும் பயிற்சியாக இருந்தாலும், தேசிய குடிமக்கள் பதிவேட்டை என் ஆர்சி செயல்படுத்துவதற்கான மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுடன் எஸ்ஐஆர் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. 90 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். ஆனால், இந்த புதிய வாக்காளர்கள் குறித்த விவரங்களை தேர்தல் ஆணையம் வெளியிடவில்லை. இது ஜனநாயகத்தின் படுகொலைக்கு சமம், மேலும் தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மை குறித்து கேள்விகளை எழுப்புகிறது.

அரசு போக்குவரத்து தொழிற்சங்களுடன் நிர்வாகமும் உடனே பேச்சுவார்த்தை நடத்தி ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும். பென்ஷன் தொகையை மாதத்தின் முதல் நாளே வழங்க வேண்டும். ஒன்றிய அரசு தினக்கூலி கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் என்பதை ஊக்குவிக்காமல் அரசு துறைகளில் நிரந்தர பணியாளர்களாக பணியமர்த்த வேண்டும். வாரியத்தில் பதிவு செய்துள்ள ஓய்வு பெற்ற அனைத்து கட்டுமான தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்சம் மாதம் ஐந்தாயிரம் உதவித்தொகை வழங்கவேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சியில் 'மக்களுடன் சந்திப்பு' நிகழ்ச்சியில் நடிகர் விஜய் பேச்சு

நாங்க என்ன தற்குறியா..?

எஸ்ஐஆர், மெட்ரோ திட்டம் நிராகரிப்பு பற்றி மவுனம்

சென்னை, நவ.24: காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார் சத்திரம் பகுதியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி ஆடிட்டோரியத்தில் நேற்று காலை தமிழக வெற்றி கழகத்தின் காஞ்சிபுரம் மக்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. முன்னதாக, இந்த கூட்டத்தில் பங்கேற்க 2 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தொலைக்காட்சி நிருபர்கள் மற்றும் பத்திரிகை செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கைக் குழந்தைகளுடன் வந்த பெண்களை உள்ளே அனுமதிக்காததால் அவர்கள் வாக்குவாதம் செய்தனர்.

கலந்துரையாடலில் பங்கேற்க க்யூஆர் கோடுடன் நுழைவு சீட்டு வழங்கப்பட்ட 2 ஆயிரம் பேரில் குறைவானவர்களே முதலில் வந்திருந்தனர். இதனால் தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் டென்ஷனில் கட்சி நிர்வாகிகளிடம் 'ஏன் அதிகளவு கூட்டம் வரவில்லை' என கேட்டு சத்தம் போட்டதாக கூறப்படுகிறது. ஆனால், நேரம் ஆக ஆக க்யூஆர் கோடுடன் அழைக்கப்பட்டவர்கள் வந்து சேர்ந்தனர்.

முன்னதாக காரில் வந்திறங்கிய தவெக தலைவர் விஜய், நிகழ்ச்சி துவங்கும் வரை கல்லூரி வளாகத்தில் உள்ள தனியறையில் தங்கியிருந்தார். காலை 10.50 மணியளவில் விஜய் கல்லூரி வளாக ஆடிட்டோரியத்துக்கு வந்தார். அவருக்கு கட்சி நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர். பின்னர், அவர் பேசியதாவது:

ஆட்சிக்கு வந்தவுடன் எல்லாருக்கும் நிரந்தரமான வீடு இருக்கணும், ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு மோட்டார் சைக்கிள் உறுதியாக இருக்கணும், காரும் தான் லட்சியம். அதற்குண்டான பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தனும். வீட்டில் இருக்கிற ஒருவரும் டிகிரி படிச்சிருக்கணும், நிரந்தர வருமானம் கிடைக்கணும் அதுக்கு உண்டான வேலைவாய்ப்பினை உருவாக்கணும், கல்வி பாடத் திட்டத்தில் சீர்திருத்தம் செய்யணும், அரசு மருத்துவமனைகளில் பொதுமக்கள் பயமின்றி நம்பி போகும்படி மாத்தணும். இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட்ல கவனம் செலுத்தணும். இதைஎப்படி செயல்படுத்த போறோம் என்று தேர்தல் அறிக்கையில் விளக்கமாக தெரியப்படுத்துவோம். தவெக தொண்டர்களை தற்குறி என்கிறார்கள்.. தவெகவினர் தற்குறிகள் கிடையாது.. தமிழ்நாட்டு அரசியலின் ஆச்சர்யக்குறிகள். இவ்வாறு அவர் பேசினார்.

ஆனால், தமிழகத்திற்கு தேவையான முக்கிய திட்டமான கோவை, மதுரை மெட்ரோ ரயில் நிராகரிப்பு மற்றும் எஸ்ஐஆர் குறித்து விஜய் வாய் திறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரங்க மேடையில் பல்வேறு தலைவர்களின் படங்கள் இருந்தபோதிலும், பேரறிஞர் அண்ணாவின் புகைப்படம் வைக்கப்படாததால் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாவட்ட மக்கள் கொந்தளித்தனர்.

எஸ்ஐஆர் பணியில் உயிரிழப்பு மிகுந்த துயரம் அளிக்கிறது

செல்வபெருந்தகை அறிக்கை

சென்னை, நவ. 24: தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை தனது எக்ஸ் தளம் பதிவில் கூறியிருப்பதாவது: குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களில் தொடர்ச்சியாக தேர்தல் சிறப்பு சீர்திருத்த பணியில் ஈடுபட்ட அலுவலர்கள் உயிரிழப்பது வருத்தமும் அளிக்கிறது. எஸ்ஐஆர் பணிச்சுமை காரணமாக குஜராத்தில் மட்டும் கடந்த 4 நாட்களில் 4 உயிர்களை இழந்துள்ள இந்த நிலை, ஒன்றிய அரசின் அலட்சியத்தையும் மனிதநேயமற்ற நிர்வாகத்தையும் வெளிப்படுத்துகிறது. பாதுகாப்பை உறுதி செய்ய தவறியுள்ள ஒன்றிய அரசு இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். அதிகப்படியான பணிச்சுமை, பாதுகாப்பற்ற பணிநிலை, போன்றவற்றால் நிகழும் இத்தகைய மரணங்கள் மீண்டும் எங்கும் நடைபெறாமல் இருக்க உடனடியாக உயர் மட்ட விசாரணை நடத்தி, இதற்கு காரணமான அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
(தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்) (AN ISO 9001-2015 CERTIFIED COMPANY)
தெற்கு சரகம்
எண்.1, ஆய்வாளர் குடியிருப்பு, த.சி.கா 6வது அணி வளாகம், புதுநத்தம் சாலை, மதுரை - 625014.
மின் அஞ்சல்: spndengrsc.tnphcl@tn.gov.in தொலைபேசி எண்: 0452-2903019

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.: 36/2025-2026 நாள்: 21.11.2025

வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு (இலட்சத்தில்) (2025-2026)
1) பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் ஆயுதப்படை காவல் ஆளிநர்களுக்காக 50 படுக்கை வசதிகள் கொண்ட காவலர் தங்குமிடம் கட்டுதல்	ரூ.155.51+ GST @ 18%
2) திருவாரூர் மாவட்டம் திருவாரூர் ஆயுதப்படை காவல் ஆளிநர்களுக்காக 50 படுக்கை வசதிகள் கொண்ட காவலர் தங்குமிடம் கட்டுதல்	ரூ.147.37 + GST @ 18%
3) மதுரை மாநகர் மதுரை ஆயுதப்படை காவல் ஆளிநர்களுக்காக 50 படுக்கை வசதிகள் கொண்ட காவலர் தங்குமிடம் கட்டுதல்	ரூ.139.27 + GST @ 18%

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in அணுகவும்
2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாளும் மற்றும் நேரமும் : 16.12.2025 நண்பகல் 12.00 மணி முதல் 24.12.2025 மாலை 06.00 மணி வரை
3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 26.12.2025 காலை 11.15 மணிக்கு
4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை www.tnphc.com & www.tnpolice.gov.in ஆகிய இணையதளங்களில் காணலாம்

செ.ம.தொ.இ/6274/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், தெற்கு சரகம் / த.நா.கா.வீ.வ.க.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 6வது தளம், B கட்டடம், கங்கா டீலூனோ, லோஹெகோன், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: எண் 1510, 2ஆவது தளம், ஸ்ரீ காம்பிளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018.
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவானகவும், கடன்தாரர் / உ.ப-கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (இதற்குப்பிறகு "கடனீட்டு கடனீந்தோர்" என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், பிரிவு 13(12)-ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26.12.2025 அன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்-ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள இணைப்பில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com-ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நிர்மாண வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
2	கடன் எண்: HL0111H19100072 கந்தராஜ் R (கடன்தாரர்), நந்தினி (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 08.10.2024 மொத்த நிலுவை: 08.10.2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.690318/- (ரூபாய் ஆறு லட்சத்து தொண்ணூறாயிரத்து முந்நூற்று பதினெட்டு மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @16% உட்பட.	கையக	அனைத்து தூண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம். அமைவிடம் வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், குடியாத்தம் சார்பதிவு மாவட்டம். குடியாத்தம் தாலுகா, கல்லப்பாடி கிராமத்தைச் சேர்ந்த அரசு புஞ்சை பமயை சர்வே எண் 389, புதிய சர்வே எண் 389/2, 0.43 ஏக்கர், இவை மனைகளாக அமைக்கப்பட்டது. இதில் நங்கிய ஒரு மனையின் எல்லைகள் பின்வருமாறு: மேற்கு: எந்து வழி, தெற்கு: R. காசி என்கிற கந்தசாமி அவர்களின் மனை, வடக்கு: ராமச்சந்திரா அவர்களின் மனை, கிழக்கு: ஜயப்பன் அவர்களின் மனை. இவற்றுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு மேற்காக 32 அடி, வடக்குத் தெற்காக 27 அடி, மொத்தம் 864 சதுர அடி அல்லது 80.26 சதுர மீட்ட